# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 65

**2 மதிப்பெண் வினாக்கள்**

20 x 2 = 40

1) 'பணம்' என்ற வார்த்தை எதன் மூலம் பெறப்பட்டது?

**பதில் :** பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான மோனேட்டா ஜீனோவிலிருந்து பெறப்பட்டது.

2) இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார்?

**பதில் :** இந்திய ரிசர்வ் வங்கி.

3) பண்டமாற்று முறை என்றால் என்ன?

**பதில் :** பண்டைய காலத்தில் பணம் பயன்படுத்தாமல் பண்டத்திற்கு பண்டம் பரிமாற்றம் நடைபெற்றதை பண்டமாற்று முறை என்றனர்.

4) அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?

**பதில் :** அண்மை கால பணத்தின் வடிவங்கள் அவை பண்டப்பணம், உலோகப் பணம், காகிதப்பணம், கடன் பணம், அருகாமைப்பணம் மற்றும் சமீபத்திய பணத்தின் வடிவங்கள் நெகிழிப்பணம், மின்னணு பணம், மின் வங்கி முதலியன ஆகும்

5) மின் - வங்கி மற்றும் மின் - பணம் - சிறு குறிப்பு வரைக.

**பதில் :** **மின்வங்கி :**
மின்னணு வங்கியை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் என்றும் அழைக்கலாம். காசோலை அல்லது ரொக்கத்தை ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.
**மின்- பணம்:**
மின்னணுப் பணம் என்பது வங்கியில் கணினி அமைப்புக்களில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.

6) பணத்தின் மதிப்பு என்றால் என்ன?

**பதில் :** பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும்.

7) சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?

**பதில் :** சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும். முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல்முறையை குறிக்கிறது.

8) கருப்புப் பணம் என்பதன் பொருள் என்ன?

**பதில் :** கருப்பு பணம் என்பது கணக்கில் கொண்டுவராத பணத்தின் ஒரு வடிவமாகும். இது பெரும்பாலும் வணிக மக்களால் தோற்றுவிக்கப்படுகிறது.

9) பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள் யாவை?

**பதில் :** **பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் :**

1. பொருளாதாரத்தில் ஒருபுறம் வளர்ச்சியும் மறுபுறம் வளர்ச்சியற்ற நிலை ஏற்பட்டு இரட்டை பொருளாதாரத்தை உருவாக்கும்.
2. உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்.

'பணம்' என்பதை வரையறுக்க

10) பணம் என்பதை வரையறுக்க.

**பதில் :** 1. பணம் அதன் பணிகளால் வரையறுக்கப்படுகிறது.
2. எவை பணமாக பயன்படுத்தப்படுமோ அவையெல்லாம் பணமாகும்.
3.பணம் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணமாகும்.

11) உலோக பணம் என்றால் என்ன?

**பதில் :** மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தில் பண்ட பணம், உலோக பணமாக மாறியது. தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்களை எளிமையாக கையாளப்பட்டதால் அவற்றின் அளவு எளிதாக அறிந்து கொள்ளப்பட்டது. பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் பெரும் பகுதியில் இவ்வகையான பணம் முக்கிய பங்கு வகித்தது.

12) கருப்பு பணத்திற்கு எதிராக சில சட்டரீதியான கூட்டமைப்பு பற்றி எழுதுக:

**பதில் :** 1. பணமோசடி நடவடிக்கை தடுப்பு சட்டம் 2002.
2. லோக்பால் மற்றும் லோகாயுக்டா சட்டம்.
3. ஊழல் தடுப்புச் சட்டம் 1988.
4. வெளிக்கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா 2015.
5. பினாமி பரிவர்த்தனை தடுப்பு சட்டம் 1988, 2016ல் திருத்தப்பட்டது.

13) முதலீடு செய்ய வழிவகுக்கும் சில முதலீட்டுக் கருவிகளை கூறுக?

**பதில் :** 1. பங்கு வர்த்தகம்
2. பாத்திரங்கள்
3. பரஸ்பர நிதி.
4. காப்பீடு
5. வைப்பு கணக்கு

14) பண்ட பணமாகப் பயன்படுத்தப்பட்டவைகள் யாவை?

**பதில் :** (i) உரோமம்
(ii) உப்பு
(iii) கோதுமை
(iv) தோல்
(v) அரிசி
(vi) பாத்திரங்கள்
(vii) ஆயுதங்கள்

15) உலோகப் பணமாகப் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் யாவை?

**பதில் :** (i) தங்கம்
(ii) வெள்ளி
(iii) வெண்கலம்
(iv) தாமிரம்
(v) ஈயம்

16) சமீபத்திய 'நெகிழிப் பணம்' என்பன யாவை?

**பதில் :** (i) கடன் அட்டைகள்
(ii) பற்று அட்டைகள்

17) கருப்புப் பணம் எந்த வெளிநாட்டு வங்கியில் அதிகமாக சேமிக்கப்படுகிறது?

**பதில் :** சுவிஸ் வங்கி (சுவிட்சர்லாந்து)

18) 'பணவீக்கம்' மற்றும் 'பணவாட்டம்' குறிப்பு வரைக.

**பதில் :** **பணவீக்கம்**
(i) பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்பு வீழ்ச்சி அடைவதைக் குறிக்கும்.
**பணவாட்டம்**
(i) பண வாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

19) பணம் மதிப்பிழப்பு என்றால் என்ன?

**பதில் :** 2016 நவம்பர் 8 ஆம் தேதி இந்தியாவில் இந்திய அரசாங்கம் கருப்பு பணத்திற்கு எதிராக அனைத்து ரூ 500 மற்றும் ரூ 1000 நோட்டுக்களை பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தது.

20) பேராசிரியர் வாக்கர் பணத்தைப் பற்றி என்ன கூறுகிறார்?

**பதில் :** பேராசிரியர் வாக்கர் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம் எனக்கூறுகிறார்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 5 x 5 = 25

21) பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?

**பதில் : பண்டமாற்று முறையில் உள்ள தீமைகள் :**

1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. பொருட்களில் பகுபடாமை
4. செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்.

22) பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக.

**பதில் : பணத்தின் பரிணாம வளர்ச்சி :**

1. பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான மொனேட்டா ஜீனோவிலிருந்து பெறப்பட்டது.
2. இது ரோமின் பெண் கடவுள் மற்றும் ரோம் பேரரசின் குடியரசு பணமாகும்.
3. இந்தியாவின் ரூபாய் என்ற சொல் சமஸ்கிருத வார்த்தையிலிருந்து பெறப்பட்டது
4. ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள்.
5. இன்று நாம் காகித பணமாகவும் நாணயங்களாகவும் பயன்படுத்துகிறோம்.
6. ஆனால் இந்த பரிணாம வளர்ச்சி ஒரே இரவில் நடைபெறவில்லை. இந்த நிலைகளை அடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனது.
7. பணத்தின் பரிணாமம் பல நிலைகளை கடந்துள்ளது.
8. ஆரம்ப மற்றும் பழங்கால நிலைதான் பண்ட மாற்று முறையாகும்.

23) வங்கி வைப்புகளின் வகைகளை விவரி.

**பதில் :** வங்கியில் வெவ்வேறு வகையான கணக்குகளின் மூலம் பணத்தை சேமிக்கலாம் அவை

**1. மாணவர் சேமிப்பு கணக்கு :**

சில வங்கிகள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கான சேமிப்பு கணக்குகள் துவக்கியுள்ளனர். இவை நெகிழ்வான விதிமுறைகளுடன் பூஜ்ஜிய இருப்புத் தொகையில் கொண்டது இதன் முக்கிய அம்சமாகும்.

**2. சேமிப்பு வைப்பு :**

வாடிக்கையாளர்கள் தன்னுடைய நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பிக்கும் கணக்கிற்கு சேமிப்பு கணக்கு எனப்படும். நுகர்வோர், பணம் தேவைப்படும்போது அவர்கள் கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். அந்த வைப்பு தொகைக்கு வங்கி பெயரளவு வட்டி அளிக்கிறது.

**3. நடப்பு கணக்கு வைப்பு:**

நடப்பு கணக்குகள் பொதுவாக வர்த்தக நிறுவனங்கள் வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ள நடப்பு கணக்கு உதவுகின்றது.

**4. நிரந்தர வைப்பு :**

நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும் நிலையான வருவாயும் விரும்புவர்கள் நிரந்தர வைப்பை காலவைப்பு எனவும் அழைக்கலாம். அவை குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

24) சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்குள்ள வேறுபாடுகள் யாவை?

**பதில் :**

| சேமிப்பு | முதலீடு |
|---|---|
| சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியாகும். | முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல் முறையை குறிக்கின்றது. |
| சேமிப்பு குறுகிய கால அல்லது அவசரகால தேவைகளை நிறைவேற்றும்.<br>வருவாய் குறைவு இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு. | மூலதன உருவாக்கத்திற்கும் வருவாய்க்கும் முதலீடு உதவுகின்றது. ஒப்பிட்டளவில் அதிகம் எந்த ஒரு முதலீட்டுக் கருவிகளிலும் முதலீடு செய்யும்போது சில இடர்பாடு ஏற்பட்டு பணத்தை இழக்கும் நிலை ஏற்பட்டாலும் அதே முதலீட்டின் மூலம் அதிகப் பணத்தை மீளவும் பெறமுடியும் என்பது உண்மையாகும். |

25) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை ?

**பதில் :** 1. பொருளாதாரத்தில் ஒருபுறம் வளர்ச்சியும் மறுபுறம் வளர்ச்சியற்ற நிலை ஏற்பட்டு இரட்டை பொருளாதாரத்தை உருவாக்கும்.

2. உண்மை அளவை குறைத்து மதிப்பீடு செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
6. ஆடம்பர நுகர்வு செலவு
7. உற்பத்தி முறையில் விலகல்
8. பற்றாக்குறை பணத்தை விநியோகித்தல்
9. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்
10. உற்பத்தி மீதான விளைவுகள்